REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 3] சென்னை: ஆனி 24உ வெள்ளி (8—7—55) ★ ★ வெளியூர்: ஆனி 25உ சனி (9—7—55) [இதழ் 21

## பி. சி. ஜி. கண்டுபிடித்தவருக்கு

*பிரெஞ்சு அரசாங்கம் பரிசு வழங்குகிறது*

பாரிஸ், ஜூலை 6—

காசநோய்த் தடுப்புக்கான பி. சி. ஜி. ஊசி மருந்து கண்டுபிடிப்பதில், பிரெஞ்சு ஆராய்ச்சியாளர் ஒருவருடன் ஒத்துழைத்து அதனைக் கண்டுபிடித்த டாக்டர் எம். காமில் க்யூரின் என்ற 82 வயதுடைய மருத்துவ நிபுணருக்கு பிரெஞ்சு அரசாங்க விஞ்ஞான ஆராய்ச்சிப் பரிசான பத்து லட்சம் பிராங்கு (1000 ஸ்டெர்லிங்) முதன்முதலாகத் தரப்பட்டிருக்கிறது எனத் தெரியவருகிறது.

# மே. பாகிஸ்தான் அகதிகளுக்கு 'சுக்ரதிசை'!

## வேலை தேடித் தர தீவிர முயற்சி!

## 15 கோடி ரூபாய் செலவில் தொழில் ஏற்பாடு!

### திட்டக் குழு ஒப்புதலும் கிடைத்துவிட்டது!

*தொழில் அதிபர்களுக்கு இந்தியப் பேரரசு அச்சாரமாகக் கடன் உதவி!*

புதுடில்லி, ஜூலை 8—

1953—54-ல் மட்டும் மேற்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியா வந்துள்ள அகதிகளில்—வேலை செய்யும் வயதடைந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை மட்டும் ஏறத்தாழ 50,000 இருக்கக்கூடுமென கணக்கிடப்படுகிறது.

அவர்களிடத்தில் வேலையின்மை, நெருக்கடியான நிலையை அடைந்துவிட்டிருப்பதால், அதற்கு உடனடியாகப் பரிகாரம் தேடவேண்டியது கட்டாயமாகிறது.

அதற்காக, ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் விதம், இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 15 கோடிவரை செலவிடுவதென அகதிகள் குடியேற்ற அமைச்சர் முடிவு கட்டியிருக்கிறார்.

அப்பெருந்தொகையைக் கொண்டு நடுத்தர, சிறுகுடிசைத் தொழில்களைத் துவங்குவது எனத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேற்படி திட்டம் ஏற்கனவே செயலாற்றப்பட்டும் வருகிறது. 1954—55, 1955—56 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும், ஆண்டு ஒன்றுக்கு ரூ. 3 கோடி விதம் செலவிட்டு, மேற்படி தொழில் ஏற்பாடுகளைத் துவங்குவதற்கு திட்டக் குழுவின் ஒப்புதலும் கிடைக்கப்பெற்று) திட்டமும் செயலுருவம் பெற்றுவிட்டிருக்கிறது,

### நெருக்கடி!

மேற்கு பாகிஸ்தானிலிருந்து இந்தியா புகுந்துள்ள அகதிகள் குடியிருக்கும் நகரப் பகுதிகளிலும், குடியிருப்பு வட்டங்களிலும் இருக்கும் அகதிகளிடை இருந்துவரும் வேலையின்மை, மிகக் கடுமையான நிலையைப் பெற்றுவிட்டது என்பதற்காக, இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் ஆண்டு ஒன்றுக்கு 3 கோடி ரூபாய் விதம் செலவிட்டு, அக்கடுமைக்குப் பரிகாரம் தேட, இந்தியப் பேரரசின் அகதிகள் குடியேற்ற அமைச்சர் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

### புள்ளி விவரம் இல்லை!

அக்குடியிருப்புகளில் உள்ள வேலையற்ற அகதிகளின் எண்ணிக்கை புள்ளி விவரம் திட்டவட்டமாகத் தெரியவில்லையானாலும், 1953—54-ல் மட்டும் மேற்கு பாகிஸ்தானிலிருந்து அங்கு வந்துள்ள வேலை செய்யும் வயது வந்த அகதிகளின் எண்ணிக்கை மட்டும் 50,000-க்கு இருக்குமென நம்பப்படுகிறது.

### வேலை தரப்பட்டிருக்கிறது!

பரிதாபாத், யுல்யாஸ் நகர், பிம்பிரி, அஸ்தினபுரம், பெய்ரகாரா, ராஜ்புரா, அஜ்மெர், கால்காஜி மால்வியா நகர் போன்ற இடங்களில் சிறு தொழில்களைத் துவங்க அதற்கான திட்டங்கள் பலவற்றிற்கு, அகதிகள் குடியேற்ற மந்திரி அனுமதி தந்துள்ளார். அத்திட்டங்களில் சில ஏற்கனவே

(4-ம் பக்கம் பார்க்க)

### சேர்க்கப்பட்டிருக்கிறதாம்!

விருதுநகர், ஜூலை 6—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், விருதுநகருக்கும் மானாமதுரைக்கும் இடையே அருப்புக்கோட்டை வழியாக இரயில் பாதை போடும் திட்டம் சேர்க்கப்பட்டுள்ளது என்று இரயில்வே துணை அமைச்சர் ஓ. வி. அழகேசன் தெரிவித்திருக்கிறார்.

## 'இரும்பு உருக்குத் தொழில் உருப்படாது'

### 'பீகார் நிலக்கரியால் செலவு மிகும்'

### 'பாக்சைட் தொழில்தான் எனக்குப் பிடிக்கும்'

*மின்சாரம் கிடைத்தால் கவனிக்கப்படும் என்கிறார் டி. டி. கிருஷ்ணமாச்சாரி*

சேலம், ஜூலை 6—

"சேலத்திலோ அல்லது அதை அடுத்துள்ள பிரதேசத்திலோ—தென்னிந்தியாவில் ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலையைத் துவங்குவது என்பது, தற்சமயம் நெய்வேலி பழுப்பு நிலக்கரியில் செய்யப்பட்டுவரும் பரீட்சையின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது; வெற்றி கிடைத்தபோதிலும்கூட, உருக்குத் தொழிலால், 600 அல்லது 700 நபர்களுக்குத்தான் வேலை கொடுக்க முடியும்; தெற்கில் ஒரு உருக்குத் தொழிற்சாலையைத் துவங்க பீகாரிலிருந்து நிலக்கரியைத் தருவிக்க முடியாது; ஏனெனில், நிலக்கரியை இங்கு கொண்டுவருவதற்காகும் போக்குவரத்துச் செலவு மிகுதியாகிவிடும்."

—இவ்வாறு, சேலம் அகில இந்திய உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் தரப்பட்ட வேண்டுகோள் மனுவிற்கு இந்தியப் பேரரசின் வர்த்தக-உருக்குத் தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கூறியுள்ளார்.

அமைச்சர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"அதிக செலவில் பீகாரிலிருந்து நிலக்கரியைக் கொண்டுவந்து சேலத்தில் உருக்குத் தொழிலைத் துவங்குவது என்பது சாத்தியமல்ல; நெய்வேலியில் செய்யப்பட்டுவரும் பரீட்சையையும், அதன் வெற்றியையும் பொறுத்திருக்கிறது.

"மேலும், நெய்வேலியின் சொந்த உபயோகத்திற்கு மட்டும் 1,30,000 கிலோவாட் மின்சாரம் தேவைப்படுகிறது. 3 லட்சம் கிலோவாட் மின்சாரத்தை உற்பத்திச் செய்யும் ஏற்பாடு அங்கு செய்யப்பட்டால், அதிலிருந்து சுமார் 50,000 கிலோவாட் மின்சாரம் தமக்குக் கிடைக்குமென சேலம் எதிர்பார்க்கலாம். அதைக்கொண்டு சேலத்தில் 'பாக்சைட்' தொழிலைத் துவங்க முடியும்!

"சில ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய 'பாக்சைட்'

(4-ம் பக்கம் பார்க்க)

### குறுக்கெழுத்துப் போட்டி:

ஆந்திர சட்ட மன்றக் கருத்து

குறுக்கெழுத்துப் போட்டிகளைக் கட்டுப்படுத்தவும், ஒழுங்குபடுத்தவும் சட்டமியற்றுவதற்கு மத்திய பாராளுமன்றத்திற்கு ஆந்திர மாநில சட்டசபை அதிகாரம் அளித்திருக்கிறதாம்.

### புளித்துப் போன காரணம்!

புதுடில்லி, ஜூலை 7—

இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொதுச்செயலாளரான அஜாய் கோஷ் மருத்துவ சிகிச்சை செய்துகொள்வதற்காக மாஸ்கோ சென்றிருக்கிறாராம்! ரஷ்யாவில் சுமார் 6 வார காலம் அவர் தங்கியிருக்கக் கூடுமென்றும், அவர் இந்தியா திரும்பும் வரையில் திரு. நம்பூதிரி பட் பொதுச் செயலாளராகப் பணியாற்றுவார் என்றும் தெரியவருகிறது.

## 'நெய்வேலியில் வெற்றி தெரிகிறது'

### 'நீரை வெளியேற்றுவது ஊக்கமளிக்கிறது'

*'முழுத் தொழில் வடிவம் கிடைக்குமுன்பே இயந்திரங்கள் வாங்கப்படும்'*

புதுடில்லி, ஜூலை 7—

நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்தில் பீறிட்டு வரும் நீரை வெளி இறைக்கும் பணி துவங்கப்பட்டதும், நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்கான இயந்திர சாதனங்களைக் கொள்முதல் செய்ய நவம்பர் மாதத்தில், இந்தியப் பேரரசு முயற்சிக்குமென நம்பப்படுகிறது.

நீரை வெளி இறைக்க இதுவரை மேற்கொண்டுள்ள முயற்சி ஊக்கமளிப்பதாக இருக்கிறது.

மேற்படி முயற்சியின் விளக்கமான முழு விவரமும் நவம்பர் மாதத்தில் இந்தியப் பேரரசிற்குக் கிடைக்கும். (4-ம் பக்கம் பார்க்க)

# அவலை நினைத்து உரலை இடிப்பதா?

## 'நெய்வேலி சுரங்கத்தில் நீர்த் தேக்கம்!'

### 'நிலக்கரியை தோண்ட முயன்றால் நீர் ஓடிவருகிறது'

### 'அதில் செலவிடும் பணமும், முயற்சியும் தண்டமாகும்'

*டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் குண விசேஷம்!*

கோவை, ஜூலை 7—

தென்னாற்காடு மாவட்டத்தில் ரூ. 60-கோடி செலவில் திட்டமிடப்பட்டுள்ள நெய்வேலி நிலக்கரித் தொழிலில் தனக்கு ஐயப்பாடுகள் இருப்பதாக மத்திய மந்திரி டி. டி கிருஷ்ணமாச்சாரி தெரிவித்திருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்கவும்)

## 'இந்தியைப் புகுத்துவதில் அவசரம் காட்டாதீர்'

### வட நாட்டு எஜமானர்களுக்கு கிருஷ்ணமாச்சாரி யோசனை

"இந்தி பேசாத பகுதிகளில் இந்தியைப் பரவச் செய்ய முனைபவர்கள், அவசரப்படாமல் சாவதானமாக அதைச் செய்ய வேண்டும்; படிப்படியாகவே இந்தி புகுத்தப்பட வேண்டும்; ஆங்கிலம் சிறிது சிறிதாக அகற்றப்பட வேண்டும்;

"அவசரமாக இந்தி நுழைக்கப்பட வேண்டும் என்று இந்தி ஆதரவாளர்கள் விரும்பினால், வட்டார மொழிகள் தலை தூக்கிவிடும்; வடநாட்டவர், 'இந்தி கட்டாயமாகப் புகுத்தப்பட வேண்டும்,' என்று விரும்பினால், தேசிய மொழியாக இந்தி உருவாக வேண்டுமென்பதற்கான வாய்ப்புகள் அழிந்துவிடும்;

### போதனா மொழி?

"போதனா மொழியில் உடனடியாக எந்தவித மாற்றமும் தேவையில்லை என நான் கருதுகிறேன்;

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 8—7—'55 வெள்ளி

# தொழிலதிபர் மறுப்பு

இந்தியப் பேரரசு, தொழில் துறையில் தென்னாட்டை அலட்சியப்படுத்திவருகிறது என்ற பரவலாக உள்ள பொதுக் கருத்துக்குத் துளியும் ஆதாரம் கிடையாது என, குற்றாலத்தில் கூடிய தமிழ் நாடு காங்கிரஸ் குழுக் கூட்டத்தில், தொழில் அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் கொக்கரித்துள்ளார். அதுவுமன்றி, தொழில் துறையில் தென்னாடு பின்தங்கிக்கிடப்பதற்கு, இப்பகுதியில் நிலக்கரியும், பெரும் முதலாளிகளும் இல்லாததே காரணம் என்றும்,உண்மை நிலையை மறைக்க முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்.

தொழில் துறையில் தென்னாடு வேண்டுமென்றே இந்தியப் பேரரசால் அலட்சியப் படுத்தப்படுகிறது என்ற கருத்து பரவலாக இருந்துவருகிறது என்ற நிகழ்கால உண்மையை, ஒரேயடியாக டில்லி அமைச்சரால் மறைத்துவிட முடியவில்லை. அத்தகைய ஆற்றல் அவருடைய சொற்களுக்கு இருக்குமானால், அதையும் அவர் கண்டிப்பாகச் செய்தே இருப்பார்.

ஒருவராலும் மறைக்க முடியாத வகையில் இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனை பரவிப் புழுத்துப்போய் இருப்பதாலும், அதன் காரணமாக இந்தியப் பேரரசின் மீது மக்களுக்கு வரம்பு கடந்த ஆத்திரம் ஏற்பட்டுள்ளதாலும், இவ்விரண்டிலிருந்தும் இந்தியப் பேரரசைக் காப்பாற்ற டில்லி அமைச்சர் தீர்மானித்துவிட்டார். அந்தத் தீர்மானத்தின் விளைவுதான் 'நிலக்கரியும், பெரும் முதலாளிகளும் தென்னாட்டில் இல்லாததினாலேயே, தென்னாட்டைத் தொழில் மயமாக்க முடியாமல் இந்தியப் பேரரசு திகைத்துக் கொண்டு இருக்கிறது' என டில்லி அமைச்சரைப் பயங்கரமாகப் பொய் கூறத் தூண்டுதல் தந்திருக்கிறது.

நிலக்கரியும், பெரும் முதலும் மட்டும்தென்னாட்டில் கிடைக்குமானால், தென்னாட்டிற்கு முதலிடத்தைக் கொடுக்க, இந்தியப் பேரரசு எப்பொழுதும் பின்வாங்கி இருக்காது என்று, தென்னாட்டு மக்கள் நம்பவேண்டும் என்பதே டி. டி. கிருஷ்ணமாச்சாரியாரின் உள்ளக்கிடக்கையாகும்.

அதாவது தொழில் துறையில் வடநாட்டைவிட தென்னாடு பன்மடங்கு பின்தங்கிக் கிடப்பதற்கு, இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைதான் காரணமாகும் எனும் கருத்தை மக்கள் கைவிட்டுவிட்டு, நம்மிடத்தில் நிலக்கரியும், பெரும் முதலும் இல்லாததினால்தான், நமது நாட்டைத் தொழில் துறையில் முன்னேற்றுவதற்கு முயற்சிக்கவொட்டாமல் இந்தியப் பேரரசு சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறது; நம்மிடம் மட்டும் நிலக்கரியும், போதிய மூலதனமும் இருக்குமானால், நமது பகுதியையும் இசந்தள்ளாக மனமுவந்து தொழில் மயமாக மாற்றிவிட்டிருக்கும் இந்தியப் பேரரசு, என்ற கருத்தை நாம் கொள்ள வேண்டும் என்பது அமைச்சரின் அவா.

அதாவது, நமது பகுதி, தொழில் துறையில் முன்னேற்றம் அடைவதை இந்தியப் பேரரசு விரும்புகிறது; ஆனால், அவ்விருப்பத்தை நிறைவேற்ற விடாமல் நம்மிடமிருக்கும் நிலக்கரி இன்மையும், மூலதன வறுமையும், இந்தியப் பேரரசின் கரங்களைக் கட்டிப்போட்டு விடுகின்றன;எனவே,இயற்கையின் சதியினால்தான் தொழில் துறையில் தென்னாடு தேங்கிக் கிடக்கிறதேயல்லாது,இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையால் அல்லவே அல்ல என்று நாம், நம்பால் இந்தியப் பேரரசிற்கு நல்லெண்ணம் இருப்பதாக நம்பவேண்டும் என டில்லி அமைச்சர் அங்கலாய்க்கிறார்!

தென்னாட்டுத் தொழில் வளர்ச்சி இந்தியப் பேரரசால் அலட்சியப்படுத்தப்படுகிறது என்று பரவலாக இருக்கும் கருத்து, போதிய ஆதாரமில்லாத புனைந்துரை அல்ல. அத்தகு புனைந்துரை மக்கள் கருத்தில் பதிந்து நிலைபெறவும் முடியாது. டில்லியின் ஓரவஞ்சனைப் போக்கு, கல்லில் செதுக்கிய எழுத்தாகிவிட்டது.

உரம் பெற்றுப் போயிருக்கின்ற ஒரு உண்மையை இல்லாது ஒழித்துவிடுவது இயலாது எனக் கண்டுகொண்ட டில்லி அமைச்சர், இந்தியப் பேரரசிற்கு ஓரவஞ்சனை மாசைக் கற்பித்தவர்கள், காங்கிரசின் எதிரிகளாவர்—மாற்றுக் கருத்துடையோர் ஆவர் எனக் கூறிவிட்டார்.

“ஓ! ஓ! அப்படியா? காங்கிரஸ் எதிரிகள் எப்பொழுதும் அப்படித்தான் கூறுவர்! காங்கிரசைப் பழிப்பதுதான் அவர்கள் பணி! காங்கிரஸ் செய்யும் காரியங்களைக் களங்கப்படுத்தித் தூற்றுவதுதான் மாற்றுக் கட்சியினரின் பரம்பரைக் குணம்! எனவே, அதை நம்பக் கூடாது! அவர்கள் கூற்றை உதறித் தள்ளி விடுவோம்!” என, தென்னாட்டு மக்கள் தீர்மானித்துக் கொண்டு, இந்தியப் பேரரசின் மாற்றாந் தாய் போக்கை மறந்து நடந்து கொள்ள முந்துவர் என்பது டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் மனக்கோட்டையாகும்!

அவர் பஞ்சத்து ஆண்டியே அல்லாது பரம்பரையாண்டி அல்லவே! பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை அவர் எதிர்க்க முற்பட்டது எப்பொழுது? 'இனி கதியில்லை—விதியில்லை' என்ற நிலை உருவான பிறகல்லவா? எனவே, மக்கள் மனப்போக்கை இன்று அவர் தவறாக அறிந்து கொண்டிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

தென்னாடு அலட்சியப்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டை, காங்கிரஸ் எதிரிகள் மட்டுமே கூறிடவில்லை; காங்கிரஸ் பெருந் தலைகளும் வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் கூறியே வருகின்றன.

திரு. அனந்தராம கிருஷ்ணன், தென்னிந்தியத் தொழில் அதிபர்களில் ஒருவராவார்—அதிலும் குறிப்பிடத் தகுந்தவராவார். அவரோ, சிம்சன் கூட்டுத் தொழில் நிறுவனத்தின் முக்கியப் பங்காளராவார். அவர் கூறுகிறார்—ஏற்கனவே கூறியும் இருக்கிறார்—அதுவும் கிருஷ்ணமாச்சாரியார் அவர்களை உடன் வைத்துக் கொண்டே, 'தொழில் துறையில் தென்னிந்தியா புறக்கணிக்கப்பட்டு வருகிறது—சில கனரக பொறியியல் தொழிற்சாலைகளைத் துவங்க வேண்டும்' என வற்புறுத்திக் கூறியுள்ளார்; அதற்கான ஆதாரங்களையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

திரு. அனந்தராமகிருஷ்ணன் காங்கிரஸ் கட்சியின் எதிரியல்ல; திராவிட இயக்கத்தில் பங்கு கொண்டு இருப்பவருமல்ல.

திராவிட இயக்கத்தவரை டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு எந்த அளவு பிடிக்காதோ, அதே அளவில்தான் அவருக்கும் பிடிக்காது. அவரே கூறுகிறார், இந்தியப் பேரரசால் தொழில் துறையில் தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருவதை!

தொழில் துறையில் தென்னாடு, இந்தியப் பேரரசால் அலட்சியப்படுத்தப்பட்டு வரும் அலங்கோலத்தை, தத்துவரீதியாகவே நம்மால் கூற முடிகிறது. நமது கருத்தை, அரசியல் காரணங்காட்டி ஒதுக்கி விடுவதும் கிருஷ்ணமாச்சாரி போன்றவர்களுக்குச் சாத்தியமாகும். அம்முறை பின்பற்றப்பட்டும் வருகிறது.

ஆனால், திரு. அனந்தராம கிருஷ்ணன் அவர்களுடைய குற்றச்சாட்டு, அனுபவ முதிர்ச்சியின் விளைவு. அரசியல் காரணம் காட்டி அவருடைய வாயுரையைக் களங்கப்படுத்திவிட முடியாது. தானும் ஒரு தொழிலதிபர் என்ற முறையில், அவர் உண்மையை, அதுவும் தன்னால் தினம் தினம் வேதனையுடன் அனுபவித்து வரும் உண்மையை கிருஷ்ணமாச்சாரியின் குற்றாலக் கூற்றுக்கு மறுப்பளிக்கும் போக்கில், எடுத்தியம்பியுள்ளார்; டில்லி அமைச்சர் என்ன சொல்லப்போகிறார்? விழிப்பார்! வேறு என்ன சொல்லுவார்?

## கோவா சர்க்காருக்கு 'வெடி' வைக்க முயற்சி?

### முறியடிக்கப்பட்டுவிட்டதாகத் தகவல்

பஞ்சிம் சர்க்காரைக் கவிழ்ப்பதற்கான முயற்சி ஒன்றை முறியடித்து விட்டதாக பாகிஸ்தான் சர்க்கார் கூறிக் கொண்டுள்ளனர்.

மாந்தவி நதியில், படகு ஒன்றிலிருந்து 325 வெடி குண்டுகள், 200 குண்டுகள், துப்பாக்கி வெடி மருந்து ஒரு கட்டு 'வயர்' எல்லாவற்றையும் பறிமுதல் செய்திருக்கின்றனராம். இதன் மூலமே சர்க்காரைக் கவிழ்க்கும் முயற்சி முறியடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இரவு முழுவதுமாக போலீசார் சோதனை நடத்தியும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிகிறது.

## கோவாவில் அதிகாரி ஒருவர் கொலை

கோவாவில் உள்ள போர்த்துகீசிய தபால் - தந்தி இலாகா அதிகாரி ஒருவர் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் வைக்கப்பட்டிருந்த ஒரு வெடிகுண்டு வெடித்தபோது அவர் பலியானார் என்று கூறப்படுகிறது.

# பரம்பையாறு—கீரியாறு வெள்ளம் வீணாகிறதே!

## பாசனத்திற்கும், மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்தக்கூடாதா?

### ஏனோதானோ என இந்தியப் பேரரசு இருப்பது ஏன்?

[இந்தியப் பேரரசு, திட்டங்கள் தீட்டி நிறைவேற்றி வருவதில் தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது—என்ற குற்றச்சாட்டினின்றும் அவர்கள் தப்ப முடியாதவர்களாகி வருகின்றனர். பெரும் நீர்ப்பாசனத் திட்டங்களை—பல மாநிலங்களுக்கு நன்மை தரும் திட்டங்களை இந்தியப் பேரரசு மனமுவந்து செய்திருக்கும்போது, இங்குள்ள சிறிய சிறிய திட்டங்களில்கூட அக்கறையுடன் நடந்துகொள்வதாகக் காணவில்லை—ஏனோதானோவென்றிருக்கிறது. அந்த நிலைக்கு என்ன பெயர்?]

★

“பெரியகுளம் அருகே வைகை ஆற்றில் அணை ஒன்று கட்டுவதற்கான கால்கோள் விழாவினை நடத்திவைக்கையில்,முதன் மந்திரி 'சென்னை மாநிலத்தில் இதுவே கடைசி நீர்ப்பாசனத் திட்டம்—ஏனெனில், அணை கட்டி அதன் நீரை உபயோகிக்கக்கூடிய ஆறுகள் வேறு, மாநிலத்தில் இல்லை', என்று பேசியிருக்கிறார்.

“அதே நிகழ்ச்சியில், அவர், 'சில ஆறுகள் மேற்குப் பகுதியில் ஓடுகின்றன; அவைகளின் தண்ணீர் அராபிக் கடலில் விழுந்து வீணாகின்றது,' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

“இந்தச் சந்தர்ப்பத்தில், அத்தகைய ஆறுகளில் ஒன்றாக திரு—கொச்சி மாநில மேற்குக் கரையோரத்தில் பாயும் கீரியாறு ஒன்றிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த ஆற்றை கிழக்குப் பக்கம் திருப்பி, சென்னை எல்லையில் அணை ஒன்று கட்டி, அதன் நீரை நீர்ப்பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கான திட்டம் ஒன்று இருந்ததாக எனக்கு நினைவிருக்கிறது; துரதிருஷ்டவசமாக, மக்களுக்குத்தெரியாத காரணங்கள் சிலவற்றால் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படாது கைவிடப்பட்டுவிட்டது. இந்தத் திட்டம் அமுல் செய்யப்பட்டால், 'தண்ணீருக்குப் பஞ்சம்' என்ற பொதுமொழிக்கு இலக்காகியுள்ள இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள சங்கரன்கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர், சாத்தூர், அருப்புக்கோட்டை ஆகிய ஊர்களுக்கு தண்ணீர் கிடைக்கும் என்று, விஷயமறிந்தவர்கள் கூறுகின்றனர். அந்தப் பகுதிகளில், 'இரு போகம்' விளைவிக்க முடியும் என்றும் கூறப்படுகிறது மேலும், மேட்டூர், பைகாரா போன்று அங்கு மின்சாரமும் உற்பத்தி செய்யப்பட்டு, அருகில் உள்ள பகுதிகளுக்கு மின்சாரம் 'சப்ளை' செய்ய முடியும் என்றும் எனக்குக் கூறப்பட்டது.

“இந்தத் திட்டம், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிறைவேற்றப்படுமாயின், அந்தப் பகுதியில் வாழும் மக்கள், முதன் மந்திரிக்கு என்றென்றைக்கும் நன்றியுடையவர்களாயிருப்பர்.”

—எம். ஏ. தங்கப்பன், சென்னை.
7—7—55 'இந்து' இதழில் கடிதம்.

★

“சென்னை ராஜ்ஜியத்தில், இனி மேற்கொள்ள வேண்டிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இல்லை; என்றாலும், திருவாங்கூர்—கொச்சி வழியே சென்று வீணாகும் ஆறுகள் சிலவற்றை சென்னை ராஜ்ஜியத்திற்குத் திருப்பிவிட்டு, இலாபகரமாக உபயோகிக்கலாமென நிபுணர்கள் கருதுகின்றனர். பரம்பையாறு திட்டத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இதைத் திருப்பிவிடுவதின்மூலம் கோவை ஜில்லாவில் உடுமலை, பல்லடம், தாராபுரம், பொள்ளாச்சி ஆகிய நான்கு தாலுகாக்களுக்குப் பாசன வசதி கிடைக்கும்; அத்துடன், ஆண்டு முழுதும் மின்சார உற்பத்தியும் செய்யலாமென்று அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது. இவ்வளவுக்கும் சுமார் 15 கோடி ரூபாய்க்குமேல் செலவாகாதென்றும் மதிப்பிடப்படுகிறது. ஆகையால், இத்தகைய திட்டங்களை நிறைவேற்றும் முயற்சியிலும் சர்க்கார் ஈடுபட வேண்டும்.”

—5-7-55, 'நவ இந்தியா', தலையங்கத்தில் ஒரு பகுதி.

## 'சிங்கம்' சிறைப்பட்டதேன்?

### சில விபரங்கள்

இரண்டாண்டுகளுக்கு முன் பதவியிலிருந்து நீக்கப்பட்டு சிறை வைக்கப்பட்ட ஷேக் முகம்மது அப்துல்லா, தனது கருத்தை மாற்றிக்கொண்டதாகவே தெரியவில்லை என்று இங்கு கூறப்படுகிறது.

மாநில அரசியல் நிர்ணய சபை வகுக்கிற கொள்கைகளை ஏற்றுக் கொண்டு நடப்பதாக விருப்பம் தெரிவித்தால், அவரை உடனே விடுதலை செய்ய இப்போதுள்ள சர்க்கார் தயாராக இருக்கிறதாம்; ஆனால், இதுவரை அப்துல்லா, தான் அப்படி நடப்பதாகக் கூற முன்வரவில்லையாம்

இப்போது, ஷேக் அப்துல்லா விடுதலை செய்யப்படுவது அவர் கையில்தானிருக்கிறதாம்.

இந்தியா—பாகிஸ்தான் இரு நாடுகளும், காஷ்மீரின் தற்காப்பு, வெளி விவகாரம் இவற்றைக் கூட்டாக மேற்கொள்ளுவது, ஜம்மு—காஷ்மீரை ஒரு சுதந்திர நாடாக வாழ அனுமதித்துவிட வேண்டும் என்பது காஷ்மீர் பிரச்சினைக்கு ஷேக் அப்துல்லா தந்த மாற்றங்களில் ஒன்று.

'இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் காஷ்மீருக்கு சுதந்திரம் வழங்கிவிட வேண்டும்—அல்லது, நியாயமான—சுதந்திரமான தேர்தல்கள் நடத்தவேண்டும்,' என்பவை. அப்துல்லாகூறிய மற்ற இரு மாற்றங்கள்.

வாக்கெடுப்பு (தேர்தல்) நடத்தும் பொறுப்பை இந்தியா, பாகிஸ்தான், ஆப்கன், ரஷ்யா, சீனா முதலிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளின் மேற்பார்வையில் நடத்தப்படலாம் என்கிறார் அவர். அப்துல்லா கூறும் இந்த மாற்றங்கள், ஜனநாயக ரீதியாக அரசியல் நிர்ணய சபையின் முடிவுகளை அவர் ஏற்றுக்கொள்ளாது நடந்துகொண்டார் என்பதைக் கூறுகின்றன.

## இந்தியாவின் டீசல் எஞ்சின் தேவைகள்

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சுமார் 75,000 முதல் ஒரு லட்சம் வரை டீசல் எஞ்சின்கள் தேவைப்படலாம் என்று அபிவிருத்திக் குழுவினர் கருதுவதாகத் தெரிய வருகிறது.

இந்தத் தேவை ஏற்கனவே உள்ளதும், இனி உண்டாகப்போவதுமான எஞ்சின்கள் உற்பத்தித் தொழிற்சாலைகள் மூலம், பூர்த்தி செய்யப்படும் என்று தெரிய வருகிறது.

# 1,20,00,000 ஏகர் நிலம் சாகுபடியாக!

### நீர்ப்பாசன வசதிகிடைக்கும்?

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்படி, சுமார் 55 இலட்சம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமென்றும், அத்துடன் 120 இலட்சம் ஏகர் நிலம் சாகுபடி செய்வதற்கான நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்றும், மத்திய அரசாங்க நீர்ப்பாசன இலாகா உதவி மந்திரி தெரிவித்திருக்கிறார்.

பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்த காலம் முழுவதும், பல திட்டங்களுக்கென மொத்தமாக ரூ. 40 கோடி மட்டும் செலவிட்டனர் இந்திய சர்க்கார்தான் முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சுமார் ரூ. 100 கோடி செலவிட்டிருக்கிறது. மேலும் இரண்டாம் திட்டத்தில் சுமார் 400 கோடி ரூபாய் வரை செலவழிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## குவாலியர்—உஜ்ஜயினி நேரடி ரயில் பாதை

### 286 மைல் போடப்படுகிறது

குவாலியரிலிருந்து சிவபுரி—குணா—அசரி வழியாக, உஜ்ஜயினிக்கு பிராட்கேஜ் ரயில் பாதை அமைப்பதற்கான துவக்க கால எஞ்சினீயரிங் சர்வே நடத்துவதை இரயில்வே போர்டு ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தப் பாதையின் நீளம் சுமார் 286 மைல் என்றும், வேறு ஒரு வழியாக 260 மைல் தூரம் மட்டுமே பாதை அமைக்கக்கூடியது பற்றியும் 'சர்வே' நடைபெறும் என்றும் கூறப்படுகிறது.

# நூல் உற்பத்தி: சில விவரங்கள்

கோவை, ஜூலை 6—

இந்த ஆண்டில், மொத்தம் 500 கோடி கெஜம் நூல் உற்பத்தி செய்யப்பட்டது என்றும், அதில், 80 கோடி கெஜம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது என்றும், ஏற்றுமதியின் இலட்சிய அளவு 90 கோடி கெஜமாக இருந்தாலும்கூட, சென்ற ஆண்டைப்போலவே இந்த ஆண்டிலும் ஏற்றுமதி அளவு இருப்பதாகவும், இத்தொகை, ஐந்தாண்டுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டதைவிட அதிகமாகும் என்றும் இந்திய சர்க்கார் ஜவுளி நூல் கமிஷனர் வி எம். நஞ்சப்பா தெரிவித்திருக்கிறார்.

இந்த ஆண்டில், மொத்தம் 50 இலட்சம் பேல் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### துணி விலை குறையும்?

பருத்தியின் விலை குறைந்திருப்பதற்கேற்றவாறு துணியின் விலையும் குறைய வேண்டும் என்று தாம் கருதுவதாகவும், இன்னும் சிறிது காலத்திற்குள் துணியின் விலை நியாயமான அளவு குறையுமென்று தாம் நம்புவதாகவும் அவர் கூறினார்.

# வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் நீதிபதிகள்!

கசாபிளாங்கா, ஜூலை 5—

வேலை நிறுத்தம் செய்து கோர்ட்டுகளை விட்டு வெளியேறுவதாகப் பயமுறுத்திய மொராக்கோ நீதிபதிகள், தாங்கள் ஆயுதக் காவலுடன் நீதிமன்றங்களுக்கு மோட்டாரில் கிர்ப்பந்தப்படுத்தி அழைத்து வரப்படுவதை ஆட்சேபித்துள்ளார்களாம்.

தங்களைக் கொன்று விடுவதாகச் சில பயமுறுத்தல் கடிதங்கள் கிடைத்ததின் பேரிலேயே வேலை நிறுத்தம் செய்வதாக அவர்கள் கூறியுள்ளனராம்.

# ரூ. 15 கோடி செலவில் மாஹி நதி அணைக்கட்டுத் திட்டம்

## பம்பாய் மாநிலத்தில் நிறைவேறுகிறது

★

'பம்பாய் மாநிலத்தின் நந்தவனம்' என்று மக்களிடை பிரபலப்பட்டுள்ள குஜராத், அதன் நிலவளத்திற்குப் பெயர்போனது. இங்கு, நிலங்கள், பலவகைப்பட்டவைகளாயிருக்கின்றன; மிகவும் வளமான நிலம் மத்திய குஜராத்தில் கெய்ரா மாவட்டத்தில் காணப்படுகிறது.

மாஹி நதி இராஜஸ்தான் பகுதியில் உற்பத்தியாகி, தென்மேற்காகப் பாய்ந்து பரோடாவுக்கு மேற்கே சில மைல் தூரத்தில் காம்பே குடாவுடன் கலக்கிறது.

மாஹி நதிமீது, கெய்ரா மாவட்டத்தில் வனக்போரி எனும் கிராமத்தில் 2,600 அடி நீளத்திற்கு ஒரு கட்டுமான அணை கட்டப்படும். இதனின்றும் வலதுகரை கால்வாய் புறப்பட்டு, 4 47 லட்சம் ஏகரா நிலத்திற்கு கெய்ரா மாவட்டத்தில் நீர்ப்பாசன வசதி கிடைக்கும்.

அணை 2,600 அடி நீளமுள்ளதாயும், வினாடிக்கு 11 லட்சம் கன அடி தண்ணீரை வெளியிடக் கூடியதுமாக இருக்குமாம்.

இந்த அணைக்கு ரூ. 6,36,940 செலவாகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

சிறிய—பெரிய கால்வாய்களாக மொத்தம் 2,338 மைல் நீளத்திற்கு பல கால்வாய்கள் இந்த மாஹி அணைக்கட்டிலிருந்து அமையும் என்று கூறப்படுகிறது.

திட்டத்திற்கான மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 15 கோடி என்று கூறப்படுகிறது.

இத்திட்டத்தினால் பல்லாயிரக் கணக்கான பேர்களுக்கு மறைமுகமான வேலை கிடைக்குமென்றும், பிரதான கால்வாய் வேலையில் மட்டும் சுமார் 10,600 பேர் வேலை செய்கின்றனர் என்றும், அணைக்கட்டில் சுமார் 3,000 பேர் வேலையிலிருக்கின்றனர் என்றும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம் : அறிக்கை—19/55

# ஜூலை 15: மும்முனைப் போராட்ட நினைவு நாள்!

★

**வரும் ஜூலை 15-ஆம் நாளை தி. மு. கழகத்தின் மும்முனைப் போராட்ட நினைவு நாளாக எல்லாக் கிளைக் கழகங்களும் கொண்டாடுமாக!**

★ தென்னாட்டவரை அடிக்கடி அலட்சியப்படுத்திப் பேசிய பண்டித நேருவுக்குக் கண்டனத்தைத் தெரிவிக்கவும், வளர்ந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆற்றலை அறிவிக்கவும் நடத்தப்பட்ட

## இரயில் நிறுத்தப் போராட்டம்;

★ ஆச்சாரியாரின் ஆகாத ஆரம்பக் கல்வித் திட்டத்தை அகற்ற வேண்டும் என்று வற்புறுத்த நடத்தப்பட்ட

## ஆச்சாரியாரின் ஆரம்பக் கல்வி எதிர்ப்பு மறியல் போராட்டம்;

★ வடநாட்டு அரசியல் ஆதிக்கம்—முதலாளித்துவ ஆதிக்கம்—மொழி ஆதிக்கம் ஆகியவற்றின் அறிகுறியாக இருந்துவரும் டால்மியாபுரம் என்ற புகைவண்டி நிலையப் பெயரை அந்த இடத்தின் பெயரான கல்லக்குடி என்று மாற்றுவதன் மூலம், மேற்கண்ட ஆதிக்கங்களை எதிர்க்கும் சக்தி தென்னாட்டில்—திராவிடத்தில் உருவாகிறது என்பதை இந்திய அரசியலாருக்கு உணர்த்தவும், வட நாட்டு ஆதிக்கம் அகல வேண்டும் என்ற உணர்ச்சியை திராவிட மக்களுக்கு ஊட்டவும் நடத்தப்பட்ட

## டால்மியாபுரப் பெயர் மாற்றப் போராட்டம்

**ஆகிய மூன்று போராட்டங்களும் மூன்று முனைகளில் 1953 ஜூலை 15-ஆம் நாள் சிறப்பாக நடத்தப்பட்டன.**

அந்தப் போராட்டங்களின் மூலம் பெற்ற வெற்றிகளைப் பற்றிப் பொதுமக்களுக்கு நினைவுபடுத்தவும், பெற வேண்டிய வெற்றிகள் குறித்துப் பொதுமக்களுக்கு ஊக்கம் அளிக்கவும் இவ்வாண்டும் சென்ற ஆண்டைப்போலவே ஜூலை 15-ஆம் நாளை கழகத் தோழர்கள் அமைதியான முறையில், கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு ஆகியவற்றைப் பின்பற்றி ஊர்வலம் நடத்துதல், பொதுக்கூட்டம் கூட்டுதல், துண்டு அறிக்கை வெளியிடுதல் போன்ற நிகழ்ச்சிகளை மேற்கொண்டு கொண்டாடுவார்களாக!

**ஜூலை 15-ஆம் நாள், திருச்சி மாவட்டக் கழகம் தொண்டர் அணி ஒன்று அமைத்து, டால்மியாபுர இரயில்வே நிலையப் பெயர்ப் பலகையில் 'கல்லக்குடி' என்ற அச்சிட்ட தாளை, அமைதியான முறையில், ஊர்வலமாகச் சென்று ஒட்டி, தி. மு. கழகத்தின் கோரிக்கையை இந்திய அரசியலாருக்கும், பொதுமக்களுக்கும் உணர்த்தும்.**

"அறிவகம்,"
சென்னை
6—7—1955

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

# திருமணங்கள்

26—6—55 காலை 9 மணியளவில், புதுவை பெருமாள் கோயில் தெரு, எண் 95 இல்லத்தில், தோழர் பாரதிதாசன் அவர்களின் மகன் தோழர் மன்னர் மன்னன் என்னும் கோபதி — தோழியர் சாவித்திரி திருமணம், திரு. சி. ஏ. அய்யாமுத்து தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் வீராசாமி எம்.பி., ஏ. பி. ஜனார்த்தனம், வ. சுப்பையா, வீரவான், மு த. வேலாயுதனார், தோழியர் வை. சு. மஞ்சுளாபாய், மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர்.

இத்திருமணத்தை யொட்டி, அன்று மாலை நடைபெற்ற கூட்டத்தில், திரு. தேவநேயப் பாவாணர், தமிழ் மொழியின் வளர்ச்சி பற்றியும், திரு. வை. பொன்னம்பலனார் தமிழ் மொழியின் இலக்கிய நாகரீக வளம் பற்றியும் அறிவுரைகளாற்றினர். பெரியார் ஈ. வெ. ரா., மற்றும் பல பிரமுகர்களிடமிருந்து மணமக்களுக்கு வாழ்த்துச் செய்திகள் வந்தன.

* * *

29—6—55 காலை $9\frac{1}{2}$ மணிக்கு, சேலம் மாவட்டம் இராசீபுரத்தை அடுத்த புதுப்பாளையத்தில், வழக்கறிஞர் திரு. நா. முத்துசாமி—தோழியர் சரசுவதி அம்மையார் திருமணம் திரு. வை. சொக்கப்பா தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் தங்கவேல், சிதம்பரம், கே. வி. கே. இராமசாமி, க. இராசாராம், வி. சிவப்பிரகாசம் ஆகியோர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்து மடல்களும், பரிசுகளும் அளிக்கப்பட்டன. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1—8—0 நன்கொடை தரப்பட்டது.

* * *

29—6—55-ல், மேட்டூர்அணை தி. மு. கழகக் கிளை துணைச் செயலாளர் தோழர் எஸ். கந்தசாமி—தோழியர் எம். ரெங்கம்மாள் திருமணம் நடைபெற்றதையொட்டி, 4—7—55 மாலை 5 மணிக்கு, மணமகன் இல்லத்தில், தோழர் பொன்னன் தலைமையில் தேநீர் விருந்து நடைபெற்றது. பல தோழர்கள் மணமக்களுக்குப் பரிசுகள் வழங்கினர். தோழர்கள் க. கு. சின்னசாமி, அ. பாலு ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினார்கள். இதன் நினைவாக, 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

30—6—55ல், திருப்பரங்குன்றம் தோழர் தே வை. முத்தையா—தோழியர் பாப்பம்மாள் திருமணம், மாந்தோப்பு கிராமத்தில் நடைபெற்றது. 3—7—55 மாலை 4 மணியளவில் தேநீர் விருந்தொன்று அளிக்கப்பட்டது தோழர் இராசு, அரசுக்கண்ணன், மற்றும் பலர் மணமக்களை வாழ்த்திப் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

30—6—55 காலை $6\frac{1}{2}$ மணிக்கு, உடுமலை சத்திரம் வீதியில் தோழர் க. நந்தகோபால்—தோழியர் இலக்குமி திருமணம் நடைபெற்றது அன்று மாலை, தோழர் இராமநாதன் தலைமையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் தோழர்கள் ப. நாராயணசாமி எம். சி., எம். பொன்னுசாமி, இரா. தங்கவேல், பி. எம். பாவா ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப்பேசினர். இறுதியில் தோழர் சி. டானியல் அவர்களின் இன்னிசை விருந்து நடைபெற்றது. இத்திருமண நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை தரப்பட்டது.

* * *

30—6—55ல், மதுரை மாவட்டம் சிந்தலச்சேரியில் நடைபெற்ற தோழர் சுருளிவேல்—தோழியர் செல்லமணி அம்மையார் திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடையளிக்கப்பட்டது.

* * *

8—7—55-ல், பெங்களூர்—இலக்குமணபுரியில், தோழர் ஆர். இராமசாமி—தோழியர் முனியம்மாள் திருமணம், தோழர் ஏ. எம். தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் என். பரசுராமன், எம். தாண்டவம், மு. அரங்கசாமி, ப. செல்வராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அதே விழாவில், ஆண் மகவு ஒன்றுக்கு தோழர் ஏ. எம். தருமலிங்கம் அவர்கள், 'கதிரேசன்' என பெயர் சூட்டினார். இவைகளின் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு தனித் தனியாக ரூ. 1, ரூ. 1 நன்கொடை தரப்பட்டது.

* * *

4—7—55 காலை 9 மணிக்கு, சேலூரில் (வ. ஆ. மாவட்டம்) தோழர் ஆ. கிருட்டிணன் இல்லத்தில் தோழர் கி. செயராமன்—தோழியர் சகுந்தலா திருமணம் நடைபெற்றது. தோழர்கள், போளூர்-கே. சுப்பிரமணியம், அ. கன்னையன், எல். ஏ. கைலாசன், கே. டி. குப்புசாமி ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசினர்.

* * *

### திருமண நன்றி அறிவிப்பு

"26—6—55 அன்று வேலூர் (சேலம்) வேலாயுதம்பாளையம் மூ. க. முத்தப்பன் அவர்களது இல்லத்தில் திரு. முருகையா தலைமையில் நடைபெற்ற எங்கள் திருமணத்திற்கு வருகை தந்து சிறப்பித்தவர்களுக்கும், வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய நண்பர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்," என்று தோழர் இராசமாணிக்கம்—தோழியர் சரசுவதி, தோழர் இரத்தினசபாபதி—தோழியர் தனலட்சுமி ஆகியோர் அறிவித்துக்கொள்கின்றனர். இத்திருமணங்களின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி பொறுப்பாளர்.

(அன்பளிப்புகளைப் பெற்றுக்கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்)

# பேச்சிலே உபகாரம்! செயலிலே அபகாரம்!!

### விருத்தாசலத்தில் ரூ.380 மோசடி.

ஜெயங்கொண்டத்திலிருந்து 3 கல் தொலைவிலுள்ள சிலகால் கிராமத்திலிருந்து முத்தைய படையாச்சி என்பவர் மணிலாப் பயிறு எடுத்துச் சென்று விருத்தாசலம் சந்தையில் விற்று, ரூ 380 கையில் வாங்கினார். உடனே பக்கத்தில் இருந்த ஒருவர், ஒரு காகிதத்தை அவரிடம் கொடுத்து, 'பணத்தை மடித்து வைத்துக்கொள்ளுங்கள்; யாராவது அபகரித்துக்கொண்டு போய்விடுவார்கள்' என்றதும் அவர் பணத்தை உடனே மடிக்க முயன்றார்; உடனே மேற்படி நபர் அவருக்கு மடிக்கத் தெரியவில்லை என்று கூறி, தாம் மடித்துத் தருவதாகச் சொல்லி பணத்தை வாங்கி அதனை மடிப்பதுபோல் மடித்து, அவரது கையில் கொடுத்துவிட்டாராம்!

சிறிது நேரம் கழித்து அவர், மடியிலிருந்த பொட்டலத்தைப் பிரித்து பார்க்கையில், அந்தப் பொட்டலத்தில் நூறு ரூபாய் அளவில் வெட்டப்பட்ட மூன்று டிம்மி பேப்பர்தான் இருந்ததாம்! ஏமாற்றிய பேர்வழியை தேடியும் கிடைக்கவில்லையாம்! (க. கி.)

## அழகிரி நூல் நிலையம் திறப்பு விழா

5—7—55 காலை 10 மணியளவில், சென்னை கோடம்பாக்கத்தில், தோழர் க. துரை தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. தோழர் இளம்பரிதி நூல் நிலையத்தைத் திறந்து வைத்தார். தோழர்கள் ச. வில்லவன், கோ. இறையரசு, ஜெயராமன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

அமெரிக்காவில் பொறுப்புள்ள பதவிகளில் இருக்கும் பெரும்பகுதி மக்கள் ஐ நா.-வில் மக்கள்சீனாவுக்கு இடமளிப்பதை எதிர்க்கவில்லையாம்

# நேரு - டிட்டோ கூட்டறிக்கை

புதுடில்லி, ஜூலை 8—

யூகோ நாட்டின் தலைவர் மார்ஷல் டிட்டோவும், இந்தியப் பிரதமர் நேருவும் பெல்கிரேடில் கையெழுத்திட்ட கூட்டறிக்கை ஒன்று, யூகோ தலைநகரிலும், புதுடில்லியிலும் ஒரே காலத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது.

பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுணுக்க, கலாச்சார ஒத்துழைப்பிற்கான செயல் முறைகள் பற்றி யோசனை செய்ய, மேற்படி இரண்டு நாடுகளும் விரைவிலேயே தங்களுக்குள் ஆலோசனைக் குழுக்களைப் பரிமாறிக் கொள்ள அந்த அறிக்கை வழிவகை செய்வதாக அறிவிக்கப்படுகிறது.

மேலும், உலக நிலைகளில் அபிவிருத்தி காணப்படுவதாகவும், ஐந்து அம்சக் கொள்கைகளே உலகில் சமாதானத்தை நிலைநாட்ட வல்லது என்று உறுதி செய்தும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மேற்கு பாகிஸ்தான்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

துவங்கப்பட்டு, சில ஆயிரக் கணக்கான அகதிகளுக்கு வேலையும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

## தொழிலதிபர்களுக்கு உதவி

மேற்படி தொழில் திட்டங்களில் பல வசதிகள் தொழிலதிபர்களுக்கும் தரப்பட்டுள்ளன. செய்துள்ள உதவிகளில், வாடகை ஏற்பாட்டின் கீழாவது, அல்லது தவணைகளைக் கொடுப்பது என்ற ஏற்பாட்டின் கீழாவது, தொழிற்சாலை நிர்மாணிப்பதற்கான நிலப் பரப்பை, ஒரு தொழிலதிபருக்குக் கொடுப்பதும் அடங்கி இருக்கிறது. அதுவுமின்றி, அதற்கு பதிலாக, தொழிலதிபர் கோருவதற்கொப்ப, அரசாங்கத்தால் தொழிற்சாலையைக் கட்டித் தருவதும், அவ்வசதிகளின் உள்ளடக்கமாகும்.

இரண்டாவது வகை உத்தரவிடப்படுமானால், தொழிற்சாலைக்கும் நிலத்திற்கும் தொழிலதிபரிடமிருந்து அரசாங்கம் வாடகை வசூலித்துக் கொள்ளும். தொழிலதிபர் விரும்பினால், அந்த நிலத்தையும் தொழிற்சாலையையும் விலைக்கு வாங்கிக் கொள்ளவும் அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கிறது.

## மேலும் வசதி!

தொழிற்சாலைக்கு, அண்டையில் உள்ள தொழிற்சாலை பகுதிகளில் வசூலிக்கப்படுவதுபோன்ற கட்டணம் வசூலித்துக்கொண்டு, மின்சாரமும் தண்ணீரும் அரசாங்கத்தால் தரப்படுகின்றன.

தொழிற்சாலையில் நிர்மாணிக்கப்படும் இயந்திரங்களுக்காகும் மூலதனச் செலவில் 50 சதவிகிதத்தை அரசாங்கம் கடனாகவும் கொடுத்து உதவுகிறது. ஏழு ஆண்டுகளுக்குள்ளாகத் திருப்பித் தரப்படும் கடன்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 4½ சத வட்டி விகிதமும், அதற்கு மேற்பட்ட ஆண்டுகளுக்கு 4¾ சத வட்டி விகிதமும் அரசாங்கம் விதித்திருக்கிறது.

இது பற்றி இறுதியான முடிவெடுக்க காஷ்மீர் தலைநகரில் கூட இருக்கும் அகதிகள் குடியேற்ற அமைச்சர்கள் கூட்டத்திற்கு இந்தியப் பேரரசின் குடியேற்ற அமைச்சர் அனுப்பிய அறிக்கையில், அகதிகள் குடியிருப்புகளில் இருந்துவரும் வயதுவந்த அகதிகள் அனைவரையும் வேலையில் ஈடுபடுத்தும் வகையில், எல்லா வாய்ப்பும் வசதியும் இரண்டாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் ஏற்படுத்திவிட முடியும் என்ற தனது நம்பிக்கையை அறிவிப்பதாகத் தெரியவருகிறது

[குறிப்பு:— ஏற்கனவே கிழக்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகளுக்கு வாழ்வு தர அண்மையில் இந்திய சர்க்கார், ரு. 100 கோடி ஒதுக்கியிருப்பதாக, செய்தி வெளிவந்தது நேயர்களுக்கு நினைவிலிருக்கலாம்.]

# கழகக் கூட்டங்கள்

★

**சேலம்**

பொன்னம்மாப்பேட்டை மல்லி செட்டித் தெருவில்

10—7—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: சி. ஏ. நாகராசு

பேசுவோர்:

கி. மனோகரன்

வி. சண்முகநாதன்

ஈ. ஆர். கிருஷ்ணன்

★

**திருக்குளம்பூர்**

வ. உ. சி. திடலில்

11—7—55 மாலை 6 மணிக்கு

தலைவர்:

குழ. நெடுஞ்செழியபாண்டியன்

பேசுவோர்:

ஈ. வெ. கி. சம்பத்

சி. பி. சிற்றரசு

## குடந்தை வட்ட தி.மு.கழகச் செயலாளர்கட்கு

10—7—55 மாலை 3 மணிக்கு, குடந்தை, ஜெ கீழ வீதி, தோழர் நீலமேகம் இல்லத்தில், குடந்தை வட்டக் குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, பல முக்கிய பொருட்கள் குறித்து முடிவெடுக்கப்படும்.

* * *

## குடந்தை நகர தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்கட்கு

10—7—55 மாலை 4 மணிக்கு, தோழர் நீலமேகம் இல்லத்தில் செயற் குழு கூடும். 18—6—55 கூட்ட வரவு-செலவு கணக்கு அடுத்து, அண்ணா கூட்டம் நடத்துதல் பற்றி யோசிக்கப்படும்.

## பாராட்டு விழா

9—7—55 மாலை 4 மணிக்கு, தோழர் இளம்பரிதிக்குப் பாராட்டு வழங்குமுகத்தான், எண் 13, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில், தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையிலும், தோழர் காஞ்சி மணிமொழியார் முன்னிலையிலும் சுவைநீர் விருந்தும், உறுப்பினர் கூட்டமும் நடைபெறும்.

## கோவா தலைவர்களுக்கு 10 ஆண்டு சிறைவாசம்

கோவா தலைவர்களான பீட்டர் ஆல்வாரஸ், கெய்டொண்டே ஆகிய இருவருக்கும், போர்ச்சுகல் இராணுவ நீதிமன்றம், தலா 10 ஆண்டு தண்டனை விதித்திருக்கிறதாம்.

தற்போது அவர்களிருவரும் கோவாவில் இல்லாமல் இந்தியாவில் இருப்பதால் அவர்களை தற்போது ஒன்றும் செய்யமுடியாது; அவர்கள் கோவாவிற்குள் நுழைந்தால்தான் தண்டிக்க முடியும்.

மேலும் கெய்டொண்டேயின் சகோதரர் உட்பட மற்றும் பலருக்கும் கோவா போர்ச்சுகீசிய இராணுவ நீதிமன்றம் தண்டனை விதித்திருக்கிறது.

## சுகாதார அதிகாரிகள்: ஒரு மாற்றம்

சென்னை மாநில பொது சுகாதாரப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளில் தற்போது இருந்து வரும் முதல், இரண்டாவது பிரிவுகள் இனிமேல் ஒன்றாக இணைக்கப்பட்டு விடுமென்றும், ஒன்றாக இணைக்கப்படும் புதிய பிரிவின் ஊதிய விகிதம் 160-20/2-200-25/2-450-50/2-600 ஆக இருக்கும் என்றும், எம். பி. பி. எஸ், அல்லது அதற்குச் சமமான மருத்துவப் பட்டதாரிகளின் ஆரம்ப ஊதியம் ரூ. 250 ஆக இருக்குமென்றும் சென்னை சர்க்கார் அறிக்கை ஒன்றில் காணப்படுகிறது.

## 'இன்பக் கனவு' நாடகம்

4—7—55 இரவு ஜெயக்கொண்டம் கண்ணன் தியேட்டரில் தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் குழுவினரின் 'இன்பக் கனவு' நாடகம் நடைபெற்றது. தோழர் எம். ஜி இராமச்சந்திரன் அவர்களைப் பாராட்டி, தோழர் சு இளநாகம் மலர்மாலை சூட்டினார் உதயநத்தம் தி மு. கழகச் சார்பிலும் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# மாநில மாநாட்டு நிதிக் கூட்டம்

இடம்: சென்னை கோகலே மன்றம்

நாள்: **10—7—55** ஞாயிறு காலை 9 மணிக்கு

தலைவர்: **அலிசேக் மன்சூர்**

பேச்சாளர்: **டி. கே. சீனிவாசன்**

பொருள்: எது தேவை?

நன்கொடை: அணா 8, 4

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

* * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * * *

# அவலை நினைத்து உரலை இடிப்பதா?

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

'சுரங்கத்தின் கீழே நீர் ஊற்றுகள் இருக்கின்றன; சுரங்கத்தில் நிலக்கரி தோண்ட துவங்கும்போது இந்த ஊற்றுக்களிலிருந்து நீர் கசியத் தொடங்கும்; அப்போது நமது பணம், முயற்சி எல்லாம் வீணாகி விடும்,' என்று அவர் கூறியிருக்கிறாராம்.

'என்றாலும், நெய்வேலி நிலக்கரிச் சுரங்கம் பற்றி நாம் இப்போது பரிசீலனை நடத்திக் கொண்டிருக்கிறோம்; இதுபற்றி வரும் ஆண்டுத் துவக்கத்தில் ஏதேனும் ஒரு முடிவு தெரியும்' என்றும் குறிப்பிட்டாராம்.

# 'இரும்பு உருக்குத் தொழில் உருப்படாது'

[1-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

தொழிலையே நான் தனித்தமுறையில் வரவேற்கிறேன். 600 அல்லது 700 மக்களுக்கு இரும்புத் தொழில் மூலம் வேலை கிடைக்கும் என்பதால், நான் இரும்புத் தொழிலைவிட 'பாக்சைட்' தொழிலையே விழைகிறேன். ஆனால், இரும்புத் தொழிலில் பகட்டு இருப்பதுடன், அது குறித்து மிகைபட விளம்பரமும் செய்யப்பட்டிருக்கிறது.

"குறைவான மூலதனச் செலவில் அதிகமான நபர்களுக்கு வேலை தரும் தொழில்களை மேற்கொள்ளுவதுதான் இந்தியப் பேரரசின் தலையாய நோக்கமாகும். நான் ஒரு தமிழன் என்ற முறையில் தென்னாட்டில் பெருந் தொழில்கள் இடம் பெறுவதில் எனக்கு அக்கறை இருக்கிறது. ஆனால், உள்ள நிலைமையையும், இருக்கும் சாதனங்களையும் நாம் நோக்க வேண்டும்."

சவ்வரிசி வர்த்தகர்களும் தங்கள் குறைகளை எடுத்துக் காட்டிப் பரிகாரம் வேண்டினர். அதற்கும் அமைச்சர் 'தன் கையே தனக்கு உதவி' என்ற போக்கில் வர்த்தகர்களுக்கு ஆறுதல் கூறிவிட்டார்.

இந்தியத் தர நிர்ணயக் குழு. மரவள்ளிக் கிழங்கில் உருவாக்கப்படும் சேலம் 'சாகோ'வை 'சவ்வரிசி' என ஒப்புக்கொண்டுள்ளதாகவும், 30,000 டன் வரையில் இவ்வாண்டில் கூடுதலாக சவ்வரிசி உருவாக்கப்பட்டிருப்பதாகவும், அதில் 10,000 டன் சவ்வரிசியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய அமைச்சர் அனுமதி கொடுக்க வேண்டுமென்றும், அதனால் உள்நாட்டில் ஏற்படும் விலை வீழ்ச்சியிலிருந்து சவ்வரிசியைக் காப்பாற்ற முடியும் என்றும், சவ்வரிசி வியாபாரிகள் அமைச்சரிடம் முறையிட்டுக்கொண்டனராம்.

அமைச்சரோ, அனுதாபத்துடன் கேட்டார்! ஆறுதல் மொழி புகன்றார்! வாக்களிக்காது மழுப்பிவிட்டார்!

# நெய்வேலியில்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

1956 மார்ச்சில்தான் தொழில் ஏற்பாட்டின் முழு விளக்கமும் தனக்குக் கிடைக்கக் கூடும் என்றபோதிலும், அதுவரை காத்திருக்காமல், இந்தியப் பேரரசு சுரங்கத் தொழிலுக்கான இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய முற்படும் எனத் தெரியவருகிறது.

தற்சமயம் நீர் இறைக்கும் பொறுப்பை, கொழும்பு திட்டத்தின் கீழ், பிரிட்டிஷ் தொழில் நிபுணர் நிறுவனமான பவுல் டப்ரைன், செவ்வனே செய்துவருகிறது.

இந்தியப் பேரரசு உற்பத்தி அமைச்சர் துறையின் கூட்டுச் செயலாளரான எஸ் ஜெகநாதன், நெய்வேலி தொழில் திட்டத்தில் கூட்டு அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார்.

# இந்தியை ........

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

"ஒரு மாணவரின் கல்வி நிலையில் பல கட்டங்களிலும் இந்தி இடம் பெறுவதற்கு இன்னும் 25 முதல் 30 ஆண்டுகள் வரை ஆகலாம்; இதற்கிடையில், 'இந்தி போதனா மொழியாகப் புகுத்தப்பட வேண்டும்,' என்று யாரேனும் விரும்பினால், அது, இந்தி பேசாத வட்டாரங்களில் பெரும் குழப்பம் நிலவுமாறு செய்துவிடும்;

## தமிழால் ஆகாதாம்!

"'கல்லூரிகளில், தமிழ் மொழிதான் போதனா மொழியாக ஆக்கப்பட வேண்டும்,' என்று, நிதி மந்திரி சுப்பிரமணியம் கூறுகிறார்; தமிழில் பாட புத்தகங்களைத் தயாரிக்க முடியுமா என்பது எனக்கு வியப்புக்குரியதாகவிருக்கிறது. பாடப் புத்தகங்களைத் தமிழில் மொழி பெயர்க்க நீண்ட நாளாகும் என்று கருதுகிறேன்,"

என்று, மத்திய மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கோவைக் கூட்டமொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

# டாக்டர் சிங்!

## தாயகம் திரும்ப மன்னர் அனுமதி

டாக்டர் கே. ஐ சிங்கின் ஆதரவாளர்களிடம், நேபாள மன்னர், டாக்டர் சிங்கிற்கு அபயம் தர வேண்டுமென மக்கள் கருதினால் அதை தாம் அவமதிக்க மாட்டார் என்று கூறியதாகத் தெரியவருகிறது. எனவே, தென் திபெத்திலிருந்து எந்த நேரத்திலும் டாக்டர் சிங், நேபாளத்திற்குள் நுழையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தெரியவருகிறது.

# ரோம் நகரில் நேரு

ரோம், ஜூலை 8—

யூகோ தலைநகர் பெல்கிரேடை விட்டுப் புறப்பட்ட பிரதமர் நேரு, ரோம் நகருக்கு நேற்று வந்து சேர்ந்திருக்கிறார். சியாம்பினோ விமான நிலையத்தில் நேருவை, இத்தாலியப் பிரதமர் புரொபசர் செக்னி வரவேற்றார். இன்று மீண்டும் புறப்பட்டு லண்டனுக்குச் செல்வாராம்.

# ரூ. 900 கோடியில் இரயில்வே அபிவிருத்தி

நாட்டின் அபிவிருத்திக்கு வகை செய்யும் முறையில், 6,500 கோடி செலவில் தயாரிக்கப்பட இருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இரயில்வே அபிவிருத்திக்கான பங்கு ரூ. 900 கோடியாக இருக்கும் என்று இரயில்வே மந்திரியார் லால்பகதூர் சாஸ்திரியார் கூறியிருக்கிறார்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் இரயில்வேக்களுக்கு ஒதுக்கப்பட்டது ரூ 400 கோடிதான் என்றும், அத்தொகை செலவழிக்கப்பட்ட பின்னர், மீண்டும் ரூ 19 கோடி வரையிலும் செலவு செய்யப்பட்டது என்றும் தெரிவித்திருக்கிறார்.

## தொழிற் சங்கங்களின் ஊர்வலம்—பொதுக்கூட்டம்

10—7—55 மாலை 5 மணிக்கு, சென்னை மேல்சபை இந்து மஸ்தூர் சபையின் சார்பில், அதனைச் சேர்ந்த சென்னை தொழிலாளர் சங்கம், துறைமுகத் தொழிலாளர் சங்கம், சென்னை வர்த்தகக் கழகம் ஆகியவைகளடங்கிய ஊர்வலம் ஒன்று, பெரம்பூர் பாரக்ஸ், கான்ரான்ஸ்மித் மைதானத்திலிருந்து புறப்பட்டு நேபியர் பார்க்கை அடையும் தோழர் எஸ். சி. சி. அந்தோனி பிள்ளை தலைமையில் பொதுக்கூட்டமும் நடைபெறும்.

## திருக்குறள் வகுப்பு

9-7-55 பிற்பகல் 2½ மணிக்கு, சென்னை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழகச் சார்பில், திரு. மயிலை சிவமுத்து, திருமதி ஆர். சுந்தராம்பாள் ஆகியோர் 'கேள்வி' என்பது குறித்து சொற்பொழிவாற்றுவர்.

## திருவப்பூர் தமிழ் மன்றம் முதலாவது ஆண்டு விழா

10—7—55 மாலை 6 மணிக்கு, திருவப்பூரில் (புதுக்கோட்டை) மேற்படி மன்றக் கட்டிடத்தில், தோழர் நா. முகம்மது சுல்தான் நடைபெறும் தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், (வலங்கைமான்) அரங்கண்ணல் ஆகியோர் பேசுவர்.

## சொற் பயிற்சிக் கூட்டங்கள்

10—7—55 மாலை 6½ மணிக்கு, சென்னை 26-வது வட்ட தி மு கழகப் பணிமனையில், தோழர் ச. கன்னியப்பன் தலைமையில், 'விடுதலை' என்னும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

10—7—55 இரவு 8 மணிக்கு, சென்னை, வண்ணை சே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில், தோழர் ஏ. முத்தையா தலைமையில், 'விடுதலை' என்னும் பொருள் பற்றி மேற்படி படிப்பக உறுப்பினர்கள் பேசுவர்.

* * *

9—7—55 மாலை 6 மணிக்கு, வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், (59, மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம்) தோழர் அ. பாரி தலைமையில், 'சொல்லும்-செயலும்' என்னும் பொருள் பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

* * *

10—7—55 காலை 10 மணிக்கு, திருச்சி, பெரிய செட்டித் தெரு, பாண்டியன் படிப்பகத்தில், 'கடமையும்—உரிமையும்' என்ற பொருள் பற்றி தோழர்கள் சு. நெடுமாறன், தி. ரா. தருமராசன், அன்புமணி ஆகியோர் பேசுவர்.

## குறள் வகுப்பு

10—7—55 காலை 9 மணிக்கு, மேற்படி படிப்பகத்தில், தோழர் தி. ரா. தருமராசன் குறள் வகுப்பு நடத்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.